தி.மு.க சார்பில் அதன் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தமிழக தலைமை தேர்தல் அலுவலர் சத்யபிரத சாகுவிடம், வாக்கு எண்ணிக்கை குறித்து மனு ஒன்று அளித்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-

தேர்தல் விதிமுறைகள் 1961-ன்படி வாக்கு எண்ணிக்கையின்போது முதலில் தபால் ஓட்டுகள் எண்ண வேண்டும். அரைமணி நேரம் கழித்த பின்புதான் மின்னணு எந்திரத்தில் பதிவாகியுள்ள வாக்குகள் எண்ணப்பட வேண்டும். இந்த நடைமுறையில் எங்களுக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. தேர்தல் ஆணையமும் இதனை பின்பற்றி வருகிறது. ஆனால் சென்னை மாநகராட்சி கமிஷனர், வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில் வாக்கு எண்ணிக்கையின்போது தபால் ஓட்டுகள் கடைசியாக எண்ணப்படும் என்று கூறியிருக்கிறார். இது சரியான நடைமுறை அல்ல. இந்த அறிவிப்பு, வேட்பாளர்களின் முகவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

### முதலில் தபால் ஓட்டுகள்

எனவே தேர்தல் ஆணையம் அனைத்து தேர்தல் அதிகாரிகளுக்கும் இதுகுறித்து முறையாக தெரிவிக்க வேண்டும். மேலும் வாக்கு எண்ணும் பணியின் போது கடைபிடிக்கவேண்டிய நடைமுறைகள் குறித்து பொது மக்கள் மற்றும் முகவர்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும்வகையில் பொது அறிவிப்பு ஒன்று வெளியிட வேண்டும்.

அதன்படி முதலில் தபால் ஓட்டுகள் மற்றும் மின்னணு தபால் ஓட்டுகள் எண்ணப்பட வேண்டும். அதன்பின் அரை மணி நேரம் கழித்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் பதிவான வாக்குகள் எண்ணுவதை தொடங்க வேண்டும். இறுதி கட்ட மின்னணு வாக்கு எந்திரத்தின் முடிவுகளை அறிவிப்பதற்கு முன்பு தபால் ஓட்டு முடிவுகளை அறிவித்து நேர்மையான, வெளிப்படையான தேர்தலை உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

News regarding DMK party letter to CEO, TN for official statement on counting of postal votes.

தினத்தந்தி

1 - JUN 2024

**ரெயிலில் ரூ.4 கோடி சிக்கிய விவகாரம்:**

# விசாரணைக்கு ஆஜராக மீண்டும் அவகாசம் கேட்ட நயினார் நாகேந்திரன்

சென்னை, ஜூன்.1-

தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் தீவிரமாக அமலில் இருந்தது. அப்போது தாம்பரம் ரெயில் நிலையத்தில் நெல்லை எக்ஸ்பிரஸ் ரெயிலில் உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.4 கோடி பணத்துடன் 3 பேர் பிடிபட்டனர். தாம்பரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து நடத்திய விசாரணையில் அவர்கள், தமிழக சட்டமன்ற பா.ஜனதா தலைவரும், நெல்லை தொகுதியில் போட்டியிட்ட வேட்பாளருமான நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமான சென்னை ஓட்டலில் பணியாற்றும் ஊழியர்கள் என்பதும், இந்த பணத்தை நயினார் நாகேந்திரனுக்கு எடுத்து சென்றதும் தெரியவந்தது. பின்னர் இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி. போலீசார் கையில் எடுத்தனர். ரெயிலில் பணத்துடன் சிக்கியவர்களுக்கு சம்மன் அனுப்பி விசாரணை நடத்தி வாக்குமூலம் பெற்றனர். மேலும் இந்த வழக்கு தொடர்பாக விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு நயினார் நாகேந்திரனுக்கும் சம்மன் அனுப்பப்பட்டது. ஆனால் அவர் விசாரணைக்கு ஆஜராகாமல் அவகாசம் கேட்டார். இதற்கிடையே இந்த வழக்கு தொடர்பாக தமிழக பா.ஜனதா பொருளாளர் சேகரிடம் விசாரணை நடைபெற்றது.

இந்த நிலையில் மே 31-ந் தேதி (நேற்று) விசாரணைக்கு ஆஜராகுமாறு நயினார் நாகேந்திரன், தமிழக பா.ஜனதா அமைப்பு பொதுச்செயலாளர் கேசவ விநாயகம், தொழில்பிரிவு தலைவர் கோவர்தன், நயினார் நாகேந்திரனின் உதவியாளர் மணிகண்டன் ஆகிய 4 பேருக்கு சி.பி.சி.ஐ.டி. போலீசார் சம்மன் அனுப்பி இருந்தார்கள். ஆனால் அவர்கள் 4 பேரும் நேற்று விசாரணைக்கு ஆஜராகவில்லை. சி.பி.சி.ஐ.டி. போலீசாரிடம் நாடாளுமன்ற தேர்தல் முடிவுக்கு பின்னர் (ஜூன் 4-ந் தேதி) ஆஜராவதாக அவர்கள் தரப்பில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

News regarding Thiru Nainar Nagendran did not appear to CBCID inquiry

தினத்தந்தி

1 - JUN 2024

பரபரப்பில் மேற்கு வங்காளம்

# 9 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு... 960 கம்பெனி துணை ராணுவம் குவிப்பு...

**மேற்கு வங்காளம்... சுவாமி விவேகானந்தர், வங்கத்து சிங்கம் சுபாஷ் சந்திர போஸ், தேசிய கீதத்தை தந்த ரவீந்திரநாத் தாகூர் உள்ளிட்ட மதிப்புக்குரியவர்கள் பலரை தந்த மாநிலம்**

சுதந்திர போராட்ட காலத்தில் இருந்தே மேற்கு வங்காளம், இந்திய அரசியலில் மிக முக்கிய இடத்தை பிடித்துள்ளது.

### இரும்புக்கோட்டை

மேற்கு வங்காளத்தில் மொத்தம் 42 நாடாளுமன்ற தொகுதிகள் உள்ளன. அவற்றுக்கு 7 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகின்றன. கடந்த 6 கட்டங்களில் 33 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடந்து முடிந்துவிட்டது. அப்போதெல்லாம் பல இடங்களில் சிறு...சிறு வன்முறை சம்பவங்கள் அரங்கேறின.

எஞ்சியுள்ள 9 தொகுதிகளுக்கு இன்று (சனிக்கிழமை) தேர்தல் நடைபெறுகிறது.

ஒரு காலத்தில் கம்யூனிஸ்டுகளின் கோட்டையாக இருந்த மாநிலம், தற்போது மம்தா பானர்ஜியின் ஆதிக்கத்தில் இருக்கும் இரும்புக்கோட்டையாக உள்ளது. இந்த முறை இந்த கோட்டையை எப்படியும் தகர்த்துவிடுவோம் என்று மத்தியில் ஆளும் பா.ஜனதா சூளுரைத்து களம் இறங்கியுள்ளது.

### பிரதமர் மோடியின் பிரசாரம்

கடந்த 2019-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் திரிணாமுல் காங்கிரஸ் 22 இடங்களையும், பா.ஜனதா 18 இடங்களையும், காங்கிரஸ் 2 இடங்களையும் கைப்பற்றி இருந்தன.

இந்த முறை அதிக இடங்களை கைப்பற்றும் முனைப்பில் பா.ஜனதா களம் இறங்கியுள்ளது.

இதற்காக பிரதமர் மோடி, மேற்கு வங்காளத்தில் கூடுதல் கவனம் செலுத்தி பிரசார கூட்டங்களில் கலந்து கொண்டார். மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவும் பல முறை அங்கு பிரசாரத்தில் ஈடுபட்டார்.

ஒரு காலத்தில் மம்தா பானர்ஜியின் நம்பிக்கைக்குரிய தளபதியாக இருந்த சுவேந்து அதிகாரி மற்றும் திரிணாமுல் காங்கிரசை சேர்ந்த பல தலைவர்கள் பா.ஜனதா பக்கம் சாய்ந்துள்ளது, பா.ஜனதாவின் பலமாக பார்க்கப்படுகிறது.

### மம்தாவின் பதிலடி

பிரதமர் மோடியின் அனல் பறக்கும் பிரசாரத்துக்கு, மாநில முதல்-மந்திரியும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜியும் உடனுக்குடன் பதிலடி கொடுத்து வருகிறார்.

அதே நேரம் காங்கிரஸ்-கம்யூனிஸ்டு கூட்டணியையும் அவர் விட்டுவைக்கவில்லை. அவர்களையும் பிரசாரத்தில் ஒரு பிடி பிடித்துவிடுகிறார்.

தேசிய அளவில் இந்தியா கூட்டணியில் இருக்கிறோம். ஆனால் மேற்கு வங்காளத்தில் எங்களுக்கு பா.ஜனதாவைபோல், காங்கிரஸ்-கம்யூனிஸ்டு கட்சிகள் எதிரிதான் என்று மம்தா பானர்ஜி கூறிவருகிறார்.

இங்கு திரிணாமுல் காங்கிரஸ், பா.ஜனதா, காங்கிரஸ்-கம்யூனிஸ்டு கட்சிகள் என் மும்முனை போட்டி இருந்தாலும், களத்தில் திரிணாமுல் காங்கிரஸ், பா.ஜனதாவின் குரலே ஓங்கி ஒலிக்கிறது. இதுவரை நடந்து முடிந்த தேர்தலில் எங்களுக்கே சாதகம் என்று இந்த இரு அணிகளும் கூறிவருகின்றன.

### வாக்குப்பதிவை எதிர்கொள்ளும் 9 தொகுதிகள்

இத்தகைய சூழ்நிலையில்தான் இன்று (சனிக்கிழமை) இறுதிக்கட்டமாக 9 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

அதாவது பரசாட், டயமண்ட் ஹார்பர், ஜாதவ்பூர், கொல்கத்தா தக்சின், மதுராபூர், பாசிர்ஹட், டம் டம், ஜாய்நகர், கொல்கத்தா உத்தர் ஆகிய 9 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதில் பாசிர்ஹட் தொகுதியில்தான் சமீபத்தில் பரபரப்பை ஏற்படுத்திய சந்தோஷ்காலி என்ற கிராமப்பகுதி உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த 9 தொகுதிகளில் 124 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 1 கோடியே 63 லட்சம் பேர் தகுதியுள்ள வாக்காளர்களாக உள்ளனர். இதில் 83 லட்சத்து 19 ஆயிரம் பேர் ஆண்கள். 80 லட்சத்து 20 ஆயிரம் பேர் பெண்கள். 538 பேர் மூன்றாம் பாலினத்தவர்கள். இவர்களுக்காக 17 ஆயிரத்து 470 வாக்குச்சாவடிகள் தயார் நிலையில் உள்ளன.

### வரலாறு காணாத பாதுகாப்பு

தேர்தல் நடைபெறுவது என்னவோ 9 தொகுதிகளுக்குத்தான். ஆனால் அங்கு பாதுகாப்பு பணியில் 960 துணை ராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுதவிர மாநில போலீசார் 33 ஆயிரம் பேரும் குவிக்கப்பட்டுள்ளனர். வரலாறு காணாத வகையில் இந்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதற்கு முன்பு தேர்தல்களில் நடந்த வன்முறை சம்பவங்கள் மற்றும் சந்தோஷ்காலி கலவரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டே இத்தகைய உயரிய பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இதனால் மேற்கு வங்காள தேர்தல் அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எது எப்படியோ... இன்று நடைபெறும் தேர்தலை மிகவும் அமைதியாக நடத்தி முடிக்க வேண்டும் என்று தேர்தல் கமிஷன் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.



நாடாளுமன்ற தேர்தலையொட்டி பர்கான்ஸ் மாவட்டத்தில் வாக்குச்சாவடிக்கு தேவையான பொருட்களை தேர்தல் அலுவலர்கள் படகில் எடுத்துச்சென்ற காட்சி.

## தாக்கத்தை ஏற்படுத்துமா சந்தோஷ்காலி விவகாரம்

மேற்கு வங்காள மாநிலம் பர்கான்ஸ் மாவட்டத்தில் உள்ள சிறிய நகரம்தான் சந்தோஷ்காலி.

இங்குள்ள பெண்களின் சொத்துகள் அபகரிக்கப்பட்டதாகவும், சில பெண்கள் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாகவும் புகார் எழுந்தது. இதற்கு முக்கிய காரணமாக விளங்கியதாக திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஷாஜகான் ஷேக் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

சந்தோஷ்காலி விவகாரம் மேற்கு வங்காள மாநிலத்தை பெரும்பரபரப்பாக்கியது. பாதிக்கப்பட்ட பெண்கள் வீதிக்கு வந்து போராடினர். அவர்களுக்கு ஆதரவாக அரசியல் கட்சியினரும், பல்வேறு அமைப்புகளும் களத்தில் இறங்கியது.

இந்த விவகாரத்தை கையில் எடுத்த பா.ஜனதா, ஷாஜகான் ஷேக்கை கைது செய்ய வேண்டும் என்று போராட்டத்தில் குதித்தது. மாநிலத்தில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு இது நெருக்கடியை ஏற்படுத்தியதால், ஷாஜகான் ஷேக்கை கட்சியைவிட்டு நீக்கியது. பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

இந்த தேர்தலில் சந்தோஷ்காலி விவகாரம் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்க்கட்சியினர் கருதுகிறார்கள்.

இந்தநிலையில் சந்தோஷ்காலியை உள்ளடக்கிய பாசிர்ஹத் நாடாளுமன்ற தொகுதியில் பா.ஜனதா வேட்பாளராக ரேகா பத்ரா களம் இறக்கப்பட்டுள்ளார். இவர் சந்தோஷ்காலி விவகாரத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக குரல் கொடுத்தவர்.

ரேகா பத்ரா வேட்பாளராக அறிவிக்கப்பட்டதும், அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிரதமர் மோடி பேசியதுடன், அவருக்கு வாழ்த்தும் தெரிவித்தார்.

மேலும் இங்கு திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் நூருல் இஸ்லாம், காங்கிரஸ் கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு சார்பில் நிரபதா சர்தார் ஆகியோரும் களம் இறங்கியுள்ளனர்.

மும்முனை போட்டி நிலவினாலும், சந்தோஷ்காலி விவகாரம் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு தீராத தலைவலியை ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும் மம்தா பானர்ஜியின் அதிரடி பிரசாரம் மூலம் அதை முறியடிப்போம் என்று திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் நம்பிக்கை தெரிவிக்கிறார்கள்.

பா.ஜனதாவின் அதிரடி அரசியலா?... மம்தாவின் தடுப்பாட்ட அரசியலா?... மக்கள் இன்று தீர்ப்பு எழுதுகிறார்கள்.

விடை 4-ந் தேதி தெரிந்துவிடும்.

News regarding last 7th phase election of 960 paramilitary used for the Bandobust.

தினத்தந்தி
1 - JUN 2024

வரலாற்றிலேயே முதல் முறையாக

# நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் ரூ.1,100 கோடி பணம், நகை பறிமுதல்

## வருமான வரித்துறை அதிரடி

புதுடெல்லி, ஜூன்.1-
வரலாற்றிலேயே முதல் முறையாக நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் ரூ.1,100 கோடி மதிப்பிலான நகை மற்றும் பணத்தை வருமான வரித்துறை பறிமுதல் செய்து சாதனை படைத்து இருக்கிறது.

### தனிப்படைகள் அமைப்பு

நாடாளுமன்ற மற்றும் சட்டசபை தேர்தல்களின்போது வாக்காளர்களுக்கு பணம், மது, போதைப்பொருட்கள், நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் என இலவசங்களை வழங்குவதை தடுக்க தேர்தல் கமிஷன் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்காக தனிப்படைகள் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. இந்த படையினர் கணக்கில் வராத பணம் மற்றும் பொருட்களை எடுத்துச்செல்வோரிடம் இருந்து அவற்றை பறிமுதல் செய்து வருகின்றனர்.

அந்தவகையில் தற்போது நடந்து வரும் நாடாளுமன்ற தேர்தல் காலத்திலும் இந்த சோதனை நடவடிக்கைகள் நடந்தது. தேர்தல் அறிவிக்கப்பட்ட கடந்த மார்ச் 16-ந்தேதி முதல் மத்திய விசாரணை அமைப்புகள் இந்த கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டன.

வருமான வரித்துறை, அமலாக்கத்துறை போன்ற இந்த மத்திய விசாரணை அதிகாரிகள், உரிய ஆவணங்கள் இன்றி ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு சென்றவர்களிடம் இருந்து அந்த பணத்தை பறிமுதல் செய்தனர்.

### வரலாற்றிலேயே முதல் முறை

தேர்தல் கமிஷனின் இந்த கண்டிப்பான நடவடிக்கைகளால் இதுவரை இல்லாத அளவுக்கு நகை மற்றும் பணம் இந்த முறை சிக்கியிருக்கிறது.

அந்தவகையில் கடந்த மார்ச் 16-ந்தேதி முதல் நேற்று முன்தினம் வரை ரூ.1,100 கோடி மதிப்பிலான நகை மற்றும் பணத்தை வருமான வரித்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்திருக்கிறார்கள்.

இவ்வளவு அதிகமான பணம் மற்றும் நகை சிக்கியிருப்பது இந்திய தேர்தல் வரலாற்றிலேயே முதல் முறை ஆகும். கடந்த தேர்தலை ஒப்பிடும்போது இது 182 சதவீதம் அதிகம் என அதிகாரிகள் கூறியுள்ளனர். அந்தவகையில் கடந்த 2019-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் ரூ.309 கோடி மதிப்பிலான நகை-பணம் சிக்கியிருந்தது.

### 2-ம் இடத்தில் தமிழ்நாடு

இந்த ஆண்டு அதிக பணம் மற்றும் பொருட்கள் சிக்கியதில் டெல்லி மற்றும் கர்நாடகா மாநிலங்கள் முதலிடம் பிடித்துள்ளன. இந்த மாநிலங்களில் தலா ரூ.200 கோடிக்கு அதிகமான பணம் மற்றும் நகைகள் சிக்கியுள்ளன.

ரூ.150 கோடிக்கு அதிகமான பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்ட தமிழ்நாடு 2-ம் இடத்தை பிடித்து இருக்கிறது. ஆந்திரா, தெலுங்கானா, ஒடிசா மாநிலங்களில் கூட்டாக ரூ.100 கோடிக்கு அதிகமான பணம் மற்றும் பொருட்கள் சிக்கியிருக்கின்றன.

நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு ரூ.1,100 கோடி மதிப்பிலான பணம் மற்றும் நகை பறிமுதல் செய்யப்பட்டிருப்பது நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

For the first time in History 1,100 crore cash, gold were seized by IT Department.

தினத்தந்தி

1 - JUN 2024

### நாடாளுமன்ற இறுதிக்கட்ட தேர்தல்

# 57 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு

## பிரதமர் மோடி உள்பட 904 பேர் களம் காண்கிறார்கள்

புதுடெல்லி, ஜூன்.1-

நாடாளுமன்றத்துக்கு இன்று (சனிக்கிழமை) இறுதிக்கட்டமாக 57 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதில் பிரதமர் மோடி உள்பட 904 வேட்பாளர்கள் களம் காண்கிறார்கள்.

### நாடாளுமன்ற தேர்தல்

இந்திய திருநாட்டின் நாடாளுமன்ற 18-வது மக்களவைக்கான தேர்தல் அட்டவணை கடந்த மார்ச் மாதம் 16-ந்தேதி அறிவிக்கப்பட்டது. அப்போது இந்த தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்தது.

அதன்படி முதல் கட்ட தேர்தல் கடந்த ஏப்ரல் 19-ந்தேதி 102 தொகுதிகளுக்கு நடைபெற்றது. இதில் தமிழ்நாடு, புதுச்சேரியை சேர்ந்த 40 தொகுதிகளும் அடங்கும்.

இதையடுத்து ஏப்ரல் 19, 26, மே 7, 13, 20 மற்றும் 25-ந்தேதிகளில் தொடர்ச்சியாக 6 கட்ட தேர்தல்கள் நடந்து முடிந்தன. மேற்குவங்காளம், ஆந்திர மாநிலங்களை தவிர மற்ற இடங்களில் அமைதியாக தேர்தல் நடந்து முடிந்தன.

### இன்று இறுதிக்கட்ட வாக்குப்பதிவு

இந்த நிலையில் 7-வது மற்றும் இறுதிக்கட்டமாக 8 மாநிலங்களை சேர்ந்த 57 தொகுதிகளில் இன்று (சனிக்கிழமை) வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் தேர்தல் கமிஷன் செய்து முடித்துவிட்டது. காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்குகிறது. மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு நிறைவடைகிறது.

பதற்றமான, மிகவும் பதற்றமான வாக்குச்சாவடிகளில் உள்ளூர் போலீசாருடன் துணை ராணுவத்தினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் அங்கு கண்காணிப்பு கேமராக்களும் பொருத்தப்பட்டு, வாக்குப்பதிவு கண்காணிக்கப்படுகிறது.

இதில் மேற்குவங்காளத்தில் 9 தொகுதிகளில் நடைபெறும் தேர்தலுக்காக வரலாறு காணாத வகையில் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. அங்கு 960 கம்பெனி துணை ராணுவத்தினருடன், உள்ளூர் போலீசார் 33 ஆயிரம் பேரும் பாதுகாப்பு பணியில் உள்ளனர்.

### பிரதமர் மோடி

இன்று தேர்தல் நடைபெறும் 57 தொகுதிகளில், பிரதமர் மோடி போட்டியிடும் வாரணாசி தொகுதியும் அடங்கும். இங்கு அவர் 3-வது முறையாக களம் காண்கிறார். அவரை எதிர்த்து காங்கிரஸ் கட்சி சார்பில் அஜய் ராய் போட்டியிடுகிறார்.

மேலும் இமாசலபிரதேசம் மண்டியில் நடிகை கங்கனா ரணாவத், ஹமீர்பூரில் மத்திய மந்திரி அனுராக் தாக்கூர், பஞ்சாப்பின் பதிண்டா தொகுதியில் சிரோன்மணி அகாலிதளம் சார்பில் ஹர்சிம்ரத் கவுர் பாதல், உத்தரபிரதேசம் கோரக்பூரில் போஜ்பூரி நடிகர் ரவிகிஷன், பீகார் மாநிலம் பாடலிபுத்ராவில் லாலு பிரசாத் யாதவின் மூத்த மகள் மிசா பாரதி, மேற்குவங்காள மாநிலம் டைமண்ட் ஹார்பரில் மம்தா பானர்ஜியின் மருமகன் அபிஷேக் பானர்ஜி உள்பட 904 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

### நீண்ட நாள் நடந்த பிரசாரம்

இன்று வாக்குப்பதிவு நடைபெறும் 57 தொகுதிகளில், கடந்த முறை (2019-ம் ஆண்டு) பா.ஜனதா 25 இடங்களிலும், திரிணாமுல் காங்கிரஸ் 9 இடங்களிலும், காங்கிரஸ் 8 இடங்களிலும் வெற்றி பெற்று இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த 7 கட்ட தேர்தலுக்கான 75 நாட்கள் பிரசாரம் நடைபெற்றது. இந்த பிரசாரங்களில் கோடை வெயிலைவிட அதிகமாக அனல் பறந்தது என்றே கூறலாம். நேற்று முன்தினம் அந்த பிரசாரம் ஓய்ந்தது.

பிரதமர் மோடி பஞ்சாப்பில் தனது பிரசாரத்தை நிறைவு செய்துவிட்டு, தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டார். தற்போது அவர் கன்னியாகுமரியில் 48 மணி நேர தியானத்தில் ஈடுபட்டுள்ளார்.

### 4-ந்தேதி வாக்கு எண்ணிக்கை

வாக்குப்பதிவு முடிவடைந்ததும், மின்னணு எந்திரங்கள் அனைத்தும் வாக்கு எண்ணும் மையத்துக்கு கொண்டு செல்லப்படும்.

இதையடுத்து வருகிற 4-ந்தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

News regarding last 7th phase elections.

தினமலர்

1 - JUN 2024

# தேர்தல் கமிஷனில் தி.மு.க., திடீர் மனு

சென்னை, ஜூன் 1–

'ஓட்டு எண்ணிக்கையின்போது, முதலில் தபால் ஓட்டுகளை எண்ண வேண்டும்' என, தி.மு.க., வலியுறுத்தி உள்ளது.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கு தி.மு.க., அமைப்பு செயலர் ஆர்.எஸ். பாரதி அனுப்பி உள்ள மனு:



பாரதி

தேர்தல் விதிகளின்படி, முதலில் தபால் ஓட்டுகள் எண்ணப்படும். எண்ணிக்கை ஆரம்பித்து 30 நிமிடங்களுக்கு பின், மின்னணு இயந்திரத்தில் பதிவான ஓட்டுகள் எண்ணப்படும். தபால் ஓட்டுகளை எண்ணி முடிப்பதற்கு முன், மின்னணு இயந்திரத்தில் பதிவான ஓட்டுகளில், கடைசி சுற்று ஓட்டுகளை எண்ணக் கூடாது என, வேட்பாளர்கள் மற்றும் முகவர்களுக்கு வழங்கப்பட்ட கையேடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விதிகளை, தேர்தல் கமிஷன் பின்பற்றும் என்பதில் எங்களுக்கு சந்தேகம் இல்லை.

ஆனால், சென்னை மாநகராட்சி கமிஷனர் வெளியிட்ட செய்திக்குறிப்பில், தபால் ஓட்டுகள் கடைசியில் எண்ணப்படும் என உள்ளது. இது சரியான நடைமுறை இல்லை; இது கட்சி முகவர்களின் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தும்.

எனவே, தேர்தல் கமிஷன் வெளிப்படையாக ஓட்டு எண்ணிக்கை நடைமுறைகளை தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DMK party letter to CEO, TN for official statement on counting of postal votes.

தினமலர்
1 - JUN 2024

# லோக்சபா தேர்தல் காலத்தில் ரூ.1,150 கோடி பணம் பறிமுதல்



**புதுடில்லி, ஜூன் 1–**

லோக்சபா தேர்தல் காலகட்டத்தில், உரிய ஆவணங்களின்றி எடுத்துச் செல்லப்பட்ட 1,150 கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்கம் மற்றும் நகைகளை வருமான வரித்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

லோக்சபா தேர்தல் தேதி மார்ச் 16ல் அறிவிக்கப்பட்டது. அன்று முதல் தேர்தல் நடத்தை விதிமுறை அமலுக்கு வந்தது. ஓட்டுகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் வரை இந்த விதிமுறைகள் அமலில் இருக்கும்.

இந்த காலகட்டத்தில், வாக்காளர்களை ஈர்ப்பதற்காக எடுத்து செல்லப்படும் பணம், நகைகள், பரிசுப் பொருட்கள், மது பானங்கள் உள்ளிட்ட பொருட்களை பறக்கும் படையினர் பறிமுதல் செய்து வருகின்றனர்.

இந்த பணி வருமான வரித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கான 24 மணி நேர கட்டுப்பாட்டு அறைகள் அனைத்து மாநிலங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

தனிநபர்கள் உரிய ஆவணங்களின்றி எடுத்து சென்ற 50,000 ரூபாய்க்கு மேலான ரொக்கம் மற்றும் 10,000 ரூபாய்க்கு மேல் மதிப்புடைய பொருட்களை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில், பறிமுதல் செய்யப்பட்ட பணம், பொருட்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட ரொக்கம் 10 லட்சம் ரூபாயை தாண்டினால், அது வருமான வரித்துறையிடம் ஒப்படைக்கப்படுகிறது.

இந்த வகையில், நடப்பு லோக்சபா தேர்தல் காலகட்டத்தில், நாடு முழுதும் 1,150 கோடி ரூபாய் மதிப்பிலான பணம், நகைகள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன.

இவை, 2019 லோக்சபா தேர்தலின் போது பறிமுதல் செய்யப்பட்டதை விட மூன்று மடங்கு அதிகம். கடந்த தேர்தலின் போது, 390 கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்கம், நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

தற்போதைய தேர்தலில் டில்லி மற்றும் கர்நாடகாவில் அதிகபட்சமாக 200 கோடி ரூபாய் மதிப்பிலான பணம், நகைகள் கைப்பற்றப்பட்டன.

தமிழகத்தில் 150 கோடி ரூபாய் மதிப்பிலான பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

ஆந்திரா, தெலுங்கானா மற்றும் ஒடிசா மாநிலங்களில் தலா 100 கோடி ரூபாய் மதிப்பிலான பணம், பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக வருமான வரித்துறை தெரிவித்து உள்ளது.

News regarding 1,100 crore cash seized by I.T. Department in over all india.

தினமலர்
1 - JUN 2024

# 57 தொகுதிகளில் இன்று இறுதிக்கட்ட ஓட்டுப்பதிவு



இறுதி மற்றும் ஏழாம் கட்ட தேர்தல் இன்று நடைபெற உள்ள நிலையில், அதற்கான மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களை ஓட்டுச்சாவடிகளுக்கு நேற்று எடுத்துச்சென்ற தேர்தல் அலுவலர்கள். இடம்: பாட்னா, பீஹார்.

**புதுடில்லி, ஜூன் 1–**

நாட்டின் 18வது லோக் சபாவை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல், ஏழு கட்டங்களாக நடக்கிறது.

மொத்தமுள்ள 543 தொகுதிகளில், குஜராத்தின் சூரத் தொகுதியில், பா.ஜ., வேட்பாளர் முகேஷ் தலால் போட்டியின்றி வெற்றி பெற்றதையடுத்து, 542 தொகுதிகளுக்கு தேர்தல் நடக்கிறது.

இதுவரை நடந்த ஆறு கட்ட தேர்தல்களில், 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 485 தொகுதிகளில் ஓட்டுப்பதிவு நிறைவடைந்து உள்ளது.

இந்நிலையில், ஏழு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசமான சண்டிகர் ஆகியவற்றின் 57 லோக் சபா தொகுதிகளில், இன்று இறுதி மற்றும் ஏழாம் கட்ட தேர்தல் நடக்கிறது.

இதன்படி, பஞ்சாப் மற்றும் உத்தர பிரதேசத்தில் தலா 13; மேற்கு வங்கத்தில் ஒன்பது; பீஹாரில் எட்டு; ஒடிசாவில் ஆறு; ஹிமாச்சலில் நான்கு; ஜார்க்கண்ட் மூன்று மற்றும் யூனியன் பிரதேசமான சண்டிகரில் தேர்தல் நடக்கிறது.

இது தவிர, ஒடிசாவில் எஞ்சியுள்ள 42 சட்டசபை தொகுதிகளுக்கும் இன்று ஓட்டுப்பதிவு நடைபெற உள்ளது.

ஏழாம் கட்ட லோக் சபா தேர்தலில், வாரணாசி தொகுதியில் பிரதமர் நரேந்திர மோடி உட்பட, 904 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இது தவிர, பீஹாரின் பாட்னா சாகிப் தொகுதியில் பா.ஜ.,வின் மூத்த தலைவர் ரவிசங்கர் பிரசாத் போட்டியிடுகிறார்.

இதேபோல் அக்கட்சி சார்பில் ஹிமாச்சல் பிரதேசத்தின் மண்டி தொகுதியில் பிரபல பாலிவுட் நடிகை கங்கனா ரனாவத், ஹமீர்பூர் தொகுதியில் மத்திய அமைச்சர் அனுராக் சிங் தாக்குர், மேற்கு வங்கத்தின் டைமண்ட் துறைமுகம் தொகுதியில் அம்மாநில முதல்வர் மம்தாவின் உறவினரான அபிஷேக் பானர்ஜி உள்ளிட்டோர் களம் காண்கின்றனர்.

இன்று நடக்கவுள்ள தேர்தலில், 10.06 கோடி வாக்காளர்கள் ஓட்டளிக்க உள்ளனர். இதற்காக, 1.09 லட்சம் ஓட்டுச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடப்பதை உறுதி செய்யும் வகையில், தேர்தல் ஆணையம் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது.

ஏழு கட்ட தேர்தல்களிலும் பதிவான ஓட்டுகள் அனைத்தும், ஜூன் 4ல் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

News regarding last 7th phase elections.

தினமணி

1 JUN 2024

ரயிலில் ரூ.4 கோடி பறிமுதல் வழக்கு

# ஜூன் 7-இல் விசாரணைக்கு ஆஜராவதாக நயினார் நாகேந்திரன் கடிதம்

சென்னை,மே 31: நெல்லை ரயிலில் ரூ.4 கோடி பறிமுதல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணைக்கு, ஜூன் 7-ஆம் தேதி ஆஜராவதாக நயினார் நாகேந்திரன் கடிதம் அனுப்பியிருப்பதாக சிபிசிஐடி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏப். 19-ஆம் தேதி தாம்பரத்தில் நெல்லை ரயிலில் உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.3.98 கோடி பணத்துடன் 3 பேர் சிக்கினர்.

தாம்பரம்போலீஸார்வழக்குப்பதிந்து நடத்திய விசாரணையில் அவர்கள், திருநெல்வேலி மக்களவைத் தொகுதி பாஜக வேட்பாளர் நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமான சென்னை ஓட்டலில் பணியாற்றும் ஊழியர்கள் என்பதும், இந்த பணத்தை நயினார் நாகேந்திரனின் தேர்தல் செலவுக்காக எடுத்துச் சென்றதாக கூறப்பட்டது.

இதை நயினார் நாகேந்திரன் திட்டவட்டமாக மறுத்தார்.

இந்த வழக்கின் விசாரணை சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது. வழக்கின் விசாரணைக்கு மே 31-ஆம் தேதி ஆஜராகுமாறு நயினார் நாகேந்திரன், தமிழக பாஜக அமைப்புச் செயலாளர் கேசவ விநாயகன், தொழில் பிரிவு மாநிலத் தலைவர் கோவர்த்தன், நயினார் நாகேந்திரனின் உதவியாளர் மணிகண்டன் உள்ளிட்ட 5 பேருக்கு சிபிசிஐடி அண்மையில் அழைப்பாணை அனுப்பியது.

ஆனால், அவர்கள் 5 பேரும் விசாரணைக்கு வெள்ளிக்கிழமை ஆஜராக வில்லை. மக்களவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை முடிவடைந்த பின்னர், ஜூன் 7-ஆம் தேதி ஆஜராவதாக நயினார் நாகேந்திரன் தரப்பு கடிதம் அனுப்பியிருப்பதாக சிபிசிஐடி அதிகாரிகள் தெரிவித்தனர்.

News regarding Thiru Nainar Nagendran did not appear to the CBCID inquiry.

தினமணி
E 1 JUN 2024

# இறுதிக் கட்ட ஆயத்தம்...




1



2



3



4

1) மக்களவைத் தேர்தலில் பஞ்சாப், உத்தர பிரதேசம், மேற்கு வங்கம், பிகார், ஒடிஸா, ஹிமாசல பிரதேசம், ஜார்க்கண்ட், சண்டீகரில் எஞ்சியுள்ள தொகுதிகளுக்கு இறுதிக் கட்டமாக சனிக்கிழமை (ஜூன் 1) நடைபெறும் 7-ஆம் கட்ட வாக்குப் பதிவு நடைபெற உள்ள நிலையில், பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் பாதுகாப்பு அறையிலிருந்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களை தனக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிக்கு வெள்ளிக்கிழமை எடுத்துச் செல்லும் தேர்தல் நடத்தும் அதிகாரி. 2) மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள மையத்தில் தங்களிடம் அளிக்கப்பட்ட மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களை வாக்குச்சாவடி மையங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு முன்பாக பரிசோதிக்கும் தேர்தல் நடத்தும் அதிகாரிகள்.
3) பிகார் மாநிலம் பாட்னாவில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் ஆட்டோ ரிக்ஷாவில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்குச் செல்லும் அதிகாரிகள்.
4) மேற்கு வங்க மாநிலம் வடக்கு 24 பர்கனாஸ் மாவட்டத்தில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கு படகு மூலம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை எடுத்துச்சென்ற அதிகாரிகள்.

News regarding last 7th phase election.

தினமணி

1 JUN 2024

# இன்று இறுதிக்கட்ட தேர்தல்

## வாரணாசி உள்பட 57 தொகுதிகளில் பலத்த பாதுகாப்பு

புது தில்லி, மே 31: மக்களவைத் தேர்தலில் ஏழாவது மற்றும் இறுதிக்கட்டமாக பிரதமர் நரேந்திர மோடி போட்டியிடும் வாரணாசி உள்பட 57 தொகுதிகளில் சனிக்கிழமை (ஜூன் 1) வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

ஏழு மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள இத்தொகுதிகளில் தேர்தலையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டில் மொத்தமுள்ள 543 மக்களவைத் தொகுதிகளுக்கு ஏழு கட்ட தேர்தல் (ஏப்ரல் 19, 26, மே 7, 13, 20, 25, ஜூன் 1) கடந்த மார்ச் மாதம் அறிவிக்கப்பட்டது. இதுவரை 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 486 தொகுதிகளுக்கு 6 கட்ட வாக்குப்பதிவுகள் நிறைவடைந்துள்ளன.

7-ஆம் கட்ட வாக்குப்பதிவில் பஞ்சாபில் மொத்தமுள்ள 13 தொகுதிகளுக்கும், ஹிமாசல பிரதேசத்தில் மொத்தமுள்ள 4 தொகுதிகளுக்கும், உத்தர பிரதேசத்தில் 13, மேற்கு வங்கத்தில் 9, பிகாரில் 8, ஒடிஸாவில் 6, ஜார்க்கண்டில் 3, சண்டீகர் யூனியன் பிரதேசத்தில் ஒரு தொகுதிக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது.

ஒடிஸாவில் மக்களவைத் தேர்தலுடன் பேரவைத் தேர்தலும் நடந்து வருகிறது. இம்மாநிலத்தில் இறுதிக்கட்டமாக 42 பேரவைத் தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறவிருக்கிறது.

**மொத்த வாக்காளர்கள்:** மக்களவைக்கான இறுதிக்கட்டத் தேர்தலில் வாக்களிக்க தகுதிபெற்ற மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை சுமார் 10.06 கோடி. இதில் ஆண்கள் 5.24 கோடி, பெண்கள் 4.82 கோடி, மூன்றாம் பாலினத்தவர் 3,574 பேர். இவர்கள் வாக்களிக்க வசதியாக, 1.09 லட்சம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பல பகுதிகளில் வெயில் வாட்டி வதைப்பதால், வாக்குச் சாவடிகளில் சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

**முக்கிய வேட்பாளர்கள்:** இறுதிக்கட்ட தேர்தல் களத்தில் மொத்தம் 904 வேட்பாளர்கள் உள்ளனர். பிரதமர் மோடி (வாரணாசி), மத்திய அமைச்சர்கள் அனுராக் தாக்குர் (ஹமீர்பூர்), மகேந்திர நாத் பாண்டே (சந்தௌலி), அனுப்ரியா படேல் (மிர்ஸாபூர்), ஆர்.கே.சிங் (ஆரா), முன்னாள் பிரதமர் சந்திரசேகரின் மகன் நீரஜ் சேகர் (பலியா), பாஜக மூத்த தலைவர் ரவிசங்கர் பிரசாத் (பாட்னா சாகிப்), மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியின் உறவினர் அபிஷேக் பானர்ஜி (டயமண்ட் ஹார்பர்), முன்னாள் மத்திய அமைச்சர் ஆனந்த் சர்மா (காங்ரா), ராஷ்ட்ரீய ஜனதா தளம் லாலு பிரசாதின் மகள் மிசா பாரதி (பாடலிபுத்ரா) உள்ளிட்டோர் முக்கிய வேட்பாளர்கள் ஆவர்.

முன்னதாக, மக்களவைத் தேர்தலையொட்டி கடந்த 2 மாதங்களாக அனல் பறந்த பிரசாரம் வியாழக்கிழமையுடன் நிறைவடைந்தது.



உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் வெள்ளிக்கிழமை வாக்குப் பதிவு இயந்திரங்களை மையங்களுக்கு கொண்டு சென்ற தேர்தல் அதிகாரிகள்.

### மத்தியில் யார் ஆட்சி? ஜூன் 4-இல் தெரியும்

மக்களவைக்கு ஏற்கெனவே நடந்துமுடிந்த 6 கட்டத் தேர்தல்களில் முறையே 66.14%, 66.71%, 65.68%, 69.16%, 62.2%, 63.36% வாக்குகள் பதிவாகியுள்ளன. சனிக்கிழமை நடைபெறும் இறுதிக்கட்டத் தேர்தலுக்கு பின் ஜூன் 4-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

ஆந்திரம், அருணாசல பிரதேசம், சிக்கிம் ஆகிய மாநிலங்களில் மக்களவைத் தேர்தலுடன் பேரவைத் தேர்தலும் நடைபெற்று முடிந்துள்ளது. ஒடிஸாவில் சனிக்கிழமையுடன் பேரவைத் தேர்தல் நிறைவடையும்.

அருணாசல பிரதேசம், சிக்கிமில் பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை ஜூன் 2-ஆம் தேதியும், இதர இரு மாநிலங்களில் ஜூன் 4-ஆம் தேதியும் நடைபெறவுள்ளன.

மக்களவைக்கான இறுதிக்கட்ட தேர்தல் சனிக்கிழமை (ஜூன் 1) நிறைவடைந்ததும், அன்றைய தினம் மாலை 6.30 மணிக்குமேல் வாக்குக் கணிப்பு முடிவுகளை வெளியிட தேர்தல் ஆணையம் அனுமதித்துள்ளது.

News regarding last 7th phase election

தினகரன்

01 - JUN 2024

# வாக்கு எண்ணிக்கை மையத்தில் தடுப்பு



▶ வரும் 4ம் தேதி நாடாளுமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடப்பதை முன்னிட்டு, பாதுகாப்பு நடவடிக்கையாக சென்னை ராணி மேரி கல்லூரி மையத்திற்கு செல்வதற்காக தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

News regarding Counting centers preparedness.

தினகரன்

1 - JUN 2024

நாடாளுமன்ற தேர்தலில்

# தபால் வாக்குகளைத்தான் முதலில் எண்ண வேண்டும்

## தமிழக தலைமை தேர்தல் அதிகாரியிடம் திமுக மனு

சென்னை, ஜூன் 1: தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகுவிடம், திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நேற்று கோரிக்கை மனு ஒன்று அளித்தார். அதில் கூறியிருப்பதாவது:

வாக்கு எண்ணிக்கையின்போது முதலில் தபால் ஓட்டுக்களை எண்ண வேண்டும். அரைமணி நேரம் கழித்த பின்பு தான் மின்னணு இயந்திரத்தில் பதிவாகியுள்ள வாக்குகள் எண்ணப்பட வேண்டும். இதுதான் தேர்தல் நடத்தை விதிமுறை. இந்த நடைமுறையில் எங்களுக்கு எந்த வித சந்தேகமும் இல்லை. தேர்தல் ஆணையமும் இதனை பின்பற்றி வருகிறது. ஆனால் சென்னை மாநகராட்சி ஆணையரான சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள ஒரு அறிவிப்பில், வாக்கு எண்ணிக்கையின்போது தபால் ஓட்டுக்கள் கடைசியாக எண்ணப்படும் என்று கூறி இருக்கிறார். இது சரியான நடைமுறை அல்ல. இந்த அறிவிப்பு, வேட்பாளர்களின் முகவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் அனைத்து தேர்தல் அதிகாரிகளுக்கும் முறையாக தெரிவிக்க வேண்டும். அதன்படி, வாக்கு எண்ணும் பணியின்போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து பொதுமக்கள் மற்றும் முகவர்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் பொது அறிவிப்பு ஒன்று வெளியிட வேண்டும்.

முதலில் தபால் ஓட்டுக்கள் எண்ணப்பட வேண்டும். அதன்பின் அரைமணி நேரம் கழித்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகளை எண்ண வேண்டும். இறுதியாக, மின்னணு வாக்கு இயந்திரத்தில் பதிவான வாக்குகளை அறிவிக்கும் முன்பு தபால் ஓட்டு முடிவுகளை அறிவித்து நேர்மையான, வெளிப்படையான தேர்தலை உறுதிப்படுத்த வேண்டும்.

DMK party writes letter to CEO, TN for official statement on counting of postal votes

தினகரன்
1 - JUN 2024

₹4 கோடி ரொக்கம் பறிமுதல் செய்த விவகாரம்

# பாஜ வேட்பாளர் நயினார் நாகேந்திரன் உள்பட 4 பேர் விசாரணைக்கு ஆஜராகவில்லை

## 4ம் தேதிக்கு பிறகு ஆஜராக போவதாக தகவல்



சிபிசிஐடி நடத்திய விசாரணையில் ₹4 கோடி பணம் நெல்லை பாஜ வேட்பாளராக போட்டியிட்ட நயினார் நாகேந்திரனுக்கு தேர்தல் செலவுக்காக கொண்டு சென்றது உறுதியாகி உள்ளது

சென்னை, ஜூன் 1: தாம்பரம் ரயில் நிலையத்தில் ₹4 கோடி பணம் பறிமுதல் செய்த விவகாரம் தொடர்பாக, நெல்லை பாஜ வேட்பாளர் நயினார் நாகேந்திரன் உள்பட 4 பேரும் ஜூன் 4ம் தேதிக்கு பிறகு ஆஜராக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற தேர்தலின் போது தாம்பரம் ரயில் நிலையத்தில் கடந்த மார்ச் 26ம் தேதி நெல்லைக்கு ரயில் மூலம் கொண்டு சென்ற ₹4 கோடி ரொக்கத்தை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். பிடிபட்ட 3 பேர், ₹4 கோடி பணம் நெல்லை நாடாளுமன்ற தொகுதி பாஜ வேட்பாளர் நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமானது என வாக்குமூலம் அளித்தனர்.

அதைதொடர்ந்து, இந்த வழக்கு தாம்பரம் காவல் நிலையத்தில் இருந்து சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டு தற்போது விசாரணை நடக்கிறது.

இந்த வழக்கில் இதுவரை நயினார் நாகேந்திரனின் ஓட்டல் ஊழியர் சதீஷ், அவரது சகோதரர் நவீன் மற்றும் ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்த லாரி டிரைவர் பெருமாள், நயினார் நாகேந்திரனின் உறவினர் முருகன், அவரிடம் பணியாற்றும் ஆசைத்தம்பி, ஜெய்சங்கர் மற்றும் பாஜ தொழிற்துறை மாநில தலைவர் கோவர்த்தனின் மகன்கள் பாலாஜி, கிஷோர் மற்றும் பாஜ மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகர் ஆகியோரிடம் சிபிசிஐடி போலீசார் விசாரணை நடத்தி வாக்குமூலம் பெற்றனர்.

இதற்கிடையே பல முறை சம்மன் அனுப்பியும் பாஜ தொழிற்துறை மாநில தலைவர் கோவர்த்தன், ஆர்.எஸ்.எஸ்.பிரமுகர் கேசவ விநாயகம், முரளி ஆகியோர் நேரில் ஆஜராகாமல் பல்வேறு காரணங்களை காட்டி தப்பி வருகின்றனர். மேலும், ஆர்.எஸ்.எஸ் பிரமுகர் கேசவ விநாயகம் ₹4 கோடி வழக்கில் தன்னிடம் விசாரணை நடத்த கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். ஆனால் நீதிமன்றம் வழக்கு விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அறிவுரை கூறி உத்தரவிட்டது.

இதை தொடர்ந்து சிபிசிஐடி போலீசார் ஆர்.எஸ்.எஸ். பிரமுகர் கேசவ விநாயகம், பாஜ பிரமுகர் முரளி, நெல்லை பாஜ வேட்பாளர் நயினார் நாகேந்திரனின் நேர்முக உதவியாளர் மணிகண்டன், பாஜ மாநில தொழிற்துறை தலைவர் கோவர்த்தன் ஆகியோர் மே 31ம் தேதி (நேற்று) எழும்பூரில் உள்ள சிபிசிஐடி தலைமை அலுவலகத்தில் விசாரணை அதிகாரிகள் முன்பு ஆஜராக வேண்டும் என்று கடந்த மூன்று தினங்களுக்கு முன் மீண்டும் சம்மன் அனுப்பப்பட்டது.

₹4 கோடி வழக்கு தற்போது இறுதிக்கட்டத்தை நெருங்கி உள்ளது. அதே நேரம் பாஜ மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகரிடம் 2 மணி நேரம் நடத்திய விசாரணையில் பணம் தொடர்பாக பல முக்கிய தகவல்கள் வாக்குமூலமாக பெறப்பட்டதாக கூறப்படுகிறது.

மேலும், இந்த வழக்கில் சிபிசிஐடி நடத்திய விசாரணையில் ₹4 கோடி பணம் நெல்லை பாஜ வேட்பாளராக போட்டியிட்ட நயினார் நாகேந்திரனுக்கு தேர்தல் செலவுக்காக கொண்டு சென்றது உறுதியாகி உள்ளது. அதற்காக பணத்தை பல இடங்களில் இருந்து வசூல் செய்து மொத்தமாக நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமான கீழ்ப்பாக்கத்தில் உள்ள ஓட்டலில் இருந்து நெல்லைக்கு ரயில் மூலம் கொண்டு சென்றது சிசிடிவி மற்றும் விசாரணைகள் மூலம் உறுதியாகி உள்ளது.

இதையடுத்து ₹4 கோடி தொடர்பாக பாஜ பிரமுகரும் நெல்லை பாஜ வேட்பாளரான நயினார் நாகேந்திரனிடம் விசாரணை நடத்த சிபிசிஐடி போலீசார் முடிவு செய்துள்ளனர்.

அதற்கான அனைத்து ஆதாரங்களையும் சிபிசிஐடி போலீசார் கடந்த ஒரு மாதமாக தனது விசாரணையின் மூலம் சேகரித்து வைத்துள்ளனர்.

இந்நிலையில், நயினார் நாகேந்திரன், கேசவ விநாயகம், நயினாரின் உதவியாளர் மணிகண்டன் ஆகியோர் எழும்பூரில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் நேற்று ஆஜராக சம்மன் அனுப்பபட்டிருந்தது. ஆனால் இவர்கள் அனைவரும் ஜூன் 4ம் தேதிக்கு பிறகு ஆஜராவதாக வழக்கறிஞர் மூலம் சிபிசிஐடி அதிகாரிகளிடம் தெரிவித்து உள்ளனர். இதனால் இவ்வழக்கு சில நாட்கள் தள்ளிப்போக வாய்ப்புள்ளது.

4 person along with Nainar Nagendran did not appear to the CBCID inquiry.

தினகரன்
01 - JUN 2024

## பிரதமர் மோடி போட்டியிடும் வாரணாசி உள்பட

# 57 தொகுதிகளில் இன்று கடைசிக்கட்ட தேர்தல்



உபி, பீகார், மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள 57 மக்களவை தொகுதிகளுக்கு இன்று வாக்கு பதிவு நடக்கிறது. இதையொட்டி மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் உள்ள ஒரு மையத்தில் இருந்து வாக்குச்சாவடிகளுக்கு எடுத்து செல்லப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்குப்பதிவு உபகரணங்களை சரிபார்க்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

## மாலை 6.30 மணிக்கு பிறகு கருத்துக்கணிப்புகள் வெளியாகும்

புதுடெல்லி, ஜூன் 1: நாடு முழுவதும் ஏப்.19 முதல் நடந்து வந்த மக்களவை தேர்தல் முடிவுக்கு வருகிறது. இன்று இறுதிகட்டமாக பிரதமர் மோடி போட்டியிடும் வாரணாசி உள்பட 57 தொகுதிகளில் ஓட்டுப்பதிவு நடக்கிறது. மாலை 6.30 மணிக்கு மேல் தேர்தல் கருத்துக்கணிப்புகள் வெளியாக உள்ளன.

மக்களவையில் மொத்தமுள்ள 543 இடங்களுக்கான 18வது மக்களவைத் தேர்தல் ஏழு கட்டங்களாக அறிவிக்கப்பட்டது. ஏப்.19ம் தேதி தொடங்கிய தேர்தல் இதுவரை 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 486 தொகுதிகளில் ஆறு கட்ட வாக்குப்பதிவுகள் முடிந்துவிட்டன. இந்நிலையில் 7 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் 7ம் கட்டமாக இறுதிகட்ட வாக்குப்பதிவு இன்று காலை 7 மணிக்கு தொடங்குகிறது. பிரதமர் மோடி போட்டியிடும் வாரணாசி உள்பட 57 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதால் அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. அதே போல் ஒடிசாவில் 41 சட்டப் பேரவை தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இறுதி கட்டமாக நடக்கும் 57 தொகுதியில் மொத்தம் 904 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 10.02 கோடி பேர் இன்று வாக்களிக்க உள்ளனர். இதற்காக 1.09லட்சம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மக்களவைத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியான கடந்த மார்ச் 16ம் தேதி தொடங்கிய தேர்தல் பரபரப்பு 76 நாள்களுக்குப் பிறகு நேற்றுடன் முழுமையாக நிறைவடைந்தது. கிட்டத்தட்ட இரண்டரை மாதங்களாக தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த நிலையில், தற்போது தேர்தல் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. இன்று வாக்குப்பதிவு முடிந்த பிறகு மாலை 6.30 மணிக்கு பிறகு வாக்குப் பதிவுக்குப் பிந்தைய கருத்துகணிப்புகளை அச்சு, காட்சி ஊடகங்கள் உள்பட அனைத்துத் தரப்பினரும் வெளியிடலாம் என்று தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன் அடிப்படையில் இன்று மாலை 6.30மணிக்கு மேல் தேர்தல் கருத்துக்கணிப்பு முடிவுகள் வெளியாக உள்ளன.

அதை தொடர்ந்து நாடு முழுவதும் ஜூன் 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும். அதனுடன் ஆந்திரா, ஒடிசா சட்டப் பேரவையில் பதிவான வாக்குகள் எண்ணப்படும். அதற்கு முன்னதாக மக்களவை தேர்தலுடன் நடந்த அருணாச்சல பிரதேசம் மற்றும் சிக்கிம் சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை (ஜூன் 2) எண்ணப்படும்.

| 6 கட்டங்களில் எவ்வளவு சதவீதம்? | |
|---|---|
| முதல்கட்டம் | 66.14 |
| 2வது கட்டம் | 66.71 |
| 3வது கட்டம் | 65.68 |
| 4வது கட்டம் | 69.16 |
| 5வது கட்டம் | 62.20 |
| 6வது கட்டம் | 63.36 |



| எந்த மாநிலங்களில் எத்தனை தொகுதிகள்? | |
|---|---|
| பஞ்சாப் | 13 |
| இமாச்சல் | 4 |
| உத்தரபிரதேசம் | 13 |
| மேற்குவங்கம் | 9 |
| பீகார் | 8 |
| ஒடிசா | 6 |
| ஜார்க்கண்ட் | 3 |
| சண்டிகார் | 1 |



### மோடிக்கு எதிராக யார், யார்?

பிரதமர் மோடி உபி மாநிலம் வாரணாசியில் தொடர்ந்து 3வது முறையாக போட்டியிடுகிறார். மோடிக்கு எதிராக அஜய் ராய் (காங்கிரஸ்), அதர் ஜமால் லாரி (பிஎஸ்பி), கோலிசெட்டி சிவ குமார் (யுக துளசி கட்சி), ககன் பிரகாஷ் யாதவ், (அப்னா தளம், காமராவதி), மற்றும் சுயேச்சைகள் தினேஷ் குமார் யாதவ், சஞ்சய் குமார் திவாரி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

## அருணாச்சல், சிக்கிம் சட்டப்பேரவைக்கு நாளை ஓட்டு எண்ணிக்கை

மக்களவை தேர்தலுடன் சட்டப் பேரவைக்கு தேர்தல் நடந்த அருணாச்சல் பிரதேசம் மற்றும் சிக்கிமில் நாளை வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. அருணாச்சல் பிரதேசத்தில் 60 சட்டப்பேரவைத் தொகுதிகளும், 2 மக்களவைத் தொகுதிகளும் உள்ளன. இதில், பாஜ 60 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் போட்டியிட்டது. எதிர்க்கட்சியான காங்கிரஸ் 34 தொகுதிகளிலும், தேசிய மக்கள் கட்சி 29 தொகுதிகளிலும், தேசியவாத காங்கிரஸ் 17 தொகுதிகளிலும், அருணாச்சல மக்கள் கட்சி (பிபிஏ) 2 தொகுதிகளிலும் போட்டியிட்டன.

அருணாச்சல பிரதேசத்தில் மொத்தமுள்ள 60 சட்டப்பேரவைத் தொகுதிகளில் முதல்வர் பெமா காண்டு உள்பட 10 பாஜ வேட்பாளர்கள் ஏற்கனவே போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதனால் மீதமுள்ள 50 தொகுதிகளில் கடந்த ஏப். 19ம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடந்தது.

இதேபோல் சிக்கிம் மாநிலத்தில் உள்ள 32 சட்டசபைக்கும் வாக்குப்பதிவு நடைபெற்றது. ஆளும் சிக்கிம் கிராந்திகாரி மோர்ச்சா சார்பில் மாநில முதல்வர் பிரேம் சிங் தமாங், சோரெங்-சாகுங், ரெனோக் ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்டார். அருணாச்சல் பிரதேசம், சிக்கிம் ஆகிய மாநில சட்டப் பேரவையின் பதவிக்காலம் நாளையுடன் முடிவடைவதால், அதற்கு முன்னதாக தேர்தல் நடத்தி முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டும் என்பது விதிமுறையாகும். அதனால் ஜூன் 4ம் தேதி நாடு முழுவதும் நடத்தப்பட்ட மக்களவை தேர்தல் முடிவுகள் வெளியிடுவதற்கு முன்பாக வரும் நாளையே அருணாச்சல் பிரதேசம், சிக்கிம் சட்டப் பேரவைக்கு பதிவான வாக்குகள் எண்ணப்படும். இங்குள்ள மக்களவை தேர்தல் வாக்குகள் ஜூன் 4ம் தேதி எண்ணப்படும். அருணாச்சலில் நாளை காலை 6 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

News regarding ~~last~~ final 7th phase elections.

தினகரன்

1 - JUN 2024

## இறுதி கட்ட தேர்தலில் களம் காணும் விஐபிக்கள்

| | |
|---|---|
| 1. பிரதமர் மோடி | வாரணாசி (உபி) |
| 2. ஒன்றிய அமைச்சர் அனுராக் தாக்கூர் | ஹமிர்பூர்(இமாச்சல்) |
| 3. ஒன்றிய அமைச்சர் மகேந்திரநாத் பாண்டே | சந்தவுலி(உபி) |
| 4. ஒன்றிய அமைச்சர் பங்கஜ் சவுத்திரி | மகராஜ்கஞ்ச்( உபி) |
| 5. ஒன்றிய அமைச்சர் அனுப்பிரியா படேல் | மிர்சாபூர் (உபி) |
| 6. ஒன்றிய அமைச்சர் ஆர்.கே.சிங் | அராக்(பீகார்) |
| 6. மறைந்த முக்தார் அன்சாரி சகோதரர் அப்சல் அன்சாரி | காசிபூர்(உபி) |
| 7. முன்னாள் பிரதமர் சந்திரசேகரின் மகன் நீரஜ் சேகர் | பல்லியா (உபி) |
| 8. மேற்குவங்க முதல்வர் மம்தா மருமகன் அபிஷேக் பானர்ஜி | டயமண்ட் ஹார்பர் |
| 9. பா.ஜ எம்பி பிரனீத் கவுர் | பாட்டியாலா(பஞ்சாப்) |
| 10. பஞ்சாப் முன்னாள் முதல்வர் சரண்ஜித்சிங் சன்னி(காங்) | ஜலந்தர் |
| 11. இமாச்சல் அமைச்சர் விக்ரமாதித்ய சிங்(காங்.) | மண்டி( இமாச்சல்) |
| 12. நடிகை கங்கனா ரணாவத்(பா.ஜ) | மண்டி( இமாச்சல்) |
| 13. ஆனந்த் சர்மா (காங்.) | காங்ரா( இமாச்சல்) |
| 14. ரவிசங்கர் பிரசாத்(பா.ஜ) | பாட்னா சாகிப்(பீகார்) |
| 15. ஜெகஜீவன் ராம் பேரன் அன்ஷூல் அவிஜித்(காங்.) | பாட்னா சாகிப்(பீகார்) |
| 16. லாலுபிரசாத் மகள் மிசா பார்தி | பாடலிபுத்ரா(பீகார்) |

list of VIPs compete in the ~~last~~ final phase election.

முரசொலி
1 - JUN 2024

### அனல் பறந்த பிரச்சாரம் ஓய்ந்தது:

# மக்களவைக்கு இன்று இறுதிக்கட்டத் தேர்தல்!

## ஜூன் 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை!

புதுடெல்லி, ஜூன் 1-

மக்களவைத் தேர்தலையொட்டி, கடந்த இரண்டரை மாதமாக அனல் பறந்த பிரச்சாரம் நேற்று முன் தினத்துடன் ஓய்ந்தது. இதைத் தொடர்ந்து, மக்களவை தேர்தலின் 7வது மற்றும் இறுதிகட்ட வாக்குப் பதிவு இன்று நடக்க உள்ளது. ஜூன் 4ம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. நாடு முழுவதும் 543 தொகுதிகளுக்கான 18வது மக்களவைத் தேர்தல் கடந்த ஏப்ரல் 19ம் தேதி தொடங்கி ஜூன் 1ம் தேதி வரை 7 கட்டமாக நடத்தப்படுகிறது. இதுவரை 6 கட்டமாக 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 486 தொகுதிகளில் வாக்குப் பதிவு முடிவடைந்து விட்டது. 6 கட்ட தேர்தலில் முறையே 66.14, 66.71, 65.68, 69.16, 62.2, 63.36 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. இந்நிலையில், 7வது மற்றும் கடைசி கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று முன்தினத்துடன் ஒய்ந்தது. கடந்த மார்ச் 16ம் தேதி தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதில் இருந்து, தேசிய கட்சித் தலைவர்கள் அனல் பறக்கும் பிரசாரத்தை தொடங்கினர். இம்முறை பிரதமர் மோடி உள்ளிட்ட பா.ஜ. தலைவர்கள் மதம், சாதி, மொழி, இன ரீதியாக பிளவுபடுத்தும் மற்றும் வெறுப்பு பேச்சுக்களுடன் பிரச்சாரம் செய்தது கடும் விமர்சனத்திற்குள்ளானது. இதுதொடர்பாக பா.ஜ. கட்சிக்கு தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்தும், மோடி உள்ளிட்ட தலைவர்கள் இறுதிவரை பிரச்சாரத்தில் வெறுப்பு பேச்சுக்களை தவிர்க்கவில்லை.

பிரசாரத்தின் நிறைவு நாளான நேற்று முன்தினம் உச்சகட்ட அனல் வீசியது. பஞ்சாப்பில் 13 தொகுதிகளுக்கும் இறுதி கட்ட தேர்தலில் ஒரே கட்டமாக தேர்தல் நடப்பதால் பிரதமர் மோடி, காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் ஆகியோர் அங்கு முகாமிட்டு சூறாவளி பிரச்சாரம் மேற்கொண்டனர்.

ஹோசியர்பூரில் பேசிய பிரதமர் மோடி, அக்னி வீரர்கள் திட்டத்தை எதிர்க்கட்சிகள் தொடர்ந்து விமர்சிப்பதை குறிப்பிட்டு, "நான் அமைதியாக இருப்பதால் தவறாக மதிப்பிட வேண்டாம். நான் வாயைத் திறந்தால் உங்களின் 7 தலைமுறை பாவத்தையும் வெளிப்படுத்தி விடுவேன். என்னைப் பற்றி எது வேண்டுமானாலும் சொல்லுங்கள். ஆனால் நாட்டின் ராணுவத்தை குறை கூறாதீர்கள்" என்கிற கடுமையான எச்சரிக்கையுடன் தனது பிரச்சாரத்தை நிறைவு செய்தார். மறு பக்கம், நவன்ஷரில் பேசிய ராகுல் காந்தி, "மீண்டும் பாஜ ஆட்சிக்கு வந்தால் அரசியலமைப்பு சட்டத்தை கிழித்தெறிந்து வீசுவோம் என மோடி, அமித்ஷா உள்ளிட்ட பா.ஜ. தலைவர்கள் தெளிவாக கூறி விட்டனர். எனவே அம்பேத்கரின் அரசியலமைப்பை பாதுகாக்க வேண்டிய மிக முக்கியமான தேர்தல் இது" என தனது பிரசாரத்தின் நிறைவாக வலியுறுத்தினார்.

"மோடி தனது தரம் தாழ்ந்த பிரசாரத்தால் பிரதமர் பதவிக்கே களங்கத்தை ஏற்படுத்திவிட்டார், நமது ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பு சர்வாதிகார ஆட்சியால் மீண்டும் மீண்டும் தாக்குலுக்கு உள்ளாக்கப்படுவதில் இருந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கான இறுதி வாய்ப்பு" என முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இத்துடன் இரண்டரை மாதமாக நடந்த பிரச்சாரம் முடிவுக்கு வந்துள்ளது. இதைத் தொடர்ந்து, 7 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 57 தொகுதிகளுக்கான இறுதிகட்ட வாக்குப் பதிவு இன்று நடக்கிறது. இதில் பிரதமர் மோடி போட்டியிடும் உ.பி.யின் வாரணாசி தொகுதியிலும் தேர்தல் நடக்க இருக்கிறது. ஜூன் 4ம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

News regarding 7th ~~last~~ phase final election.